REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 290

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 6உ புதன் (19—5—54) ★ ★ ★ வெளியீடு: வைகாசி 7உ வியாழன் (20—5—54)

அமெரிக்க வரலாற்றில் புதிய கட்டம்

ஆந்திராவும் சென்னையைப் பின்பற்றுகிறது!

புதிய கல்வித் திட்டத்திற்கு அங்கும் புதை குழி!

ஆய்வுக் குழுவின் ஒருமித்த முடிவு

வால்டேர், மே 18—

ஆந்திராவில் அமுலில் உள்ள ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் கைவிடப்படும் என்று தெரிகிறது.

புதிய கல்வித் திட்டம் பற்றி ஆராய்ந்து முடிவு செய்யுமாறு ஆந்திர சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு அத்திட்டத்தைக் கைவிடலாமென்று ஏகமனதாக முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

தொழில் கல்விக்கு பள்ளிகளில் அதிக நேரம் ஒதுக்க வேண்டும் என்று அக்கமிட்டி மேலும் ஆலோசனை கூறியுள்ளது.

ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்றும், மாணவர்களுக்கும் பகல் உணவு அளிக்க வேண்டுமென்றும் கமிட்டியினர் தெரிவித்துள்ளனர்.

ஆந்திர நாட்டின் கிராமப் பகுதிகளில் உள்ள இளம் சிறுவர்களில் 30 சத விகிதத்தினரே பள்ளிக்குச் செல்லுகின்றனர் என்றாலும், புதிய கல்வித் திட்டத்தில் உள்ள 'ஷிப்ட்' முறையை அமுல் செய்வது அவசியம் இல்லை என்று கமிட்டியினர் கூறியுள்ளனர்.

ஆந்திராவில் உள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் சர்க்காரே நடத்த வேண்டுமென்றும், பள்ளிப் பாடப் புத்தகங்களை சர்க்காரே வெளியிட வேண்டும் என்றும், கமிட்டியினர் சிபார்சு செய்துள்ளனர்.

ஆந்திராவில் இரும்பதாகச் சொல்லப்படும் ஆரம்பப் பள்ளிகளில் பெரும்பான்மையானவை உண்மையில் நடைபெறவில்லை என்றும், சர்க்காரின் கிராண்ட் பெற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தான் 17,000-க்கு மேற்பட்ட பள்ளிகள் நடைபெறுகின்றன என்றும், கமிட்டியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஜப்பானில் விஷ மழை!

டோக்கியோ, மே. 17—

அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு ஆகியவைகளை வெடித்துப் பார்த்ததால் ஏற்பட்டுள்ள விபரீதங்களில் ஒன்று விஷ மழை!

ஜப்பானில் நேற்று, விஷ மழை காகோஷிமா பகுதியில் பெய்ததாம்.

இதிலே நாசம் விளைவிக்கும் 'சக்தி' கலந்திருப்பதாக நிபுணர்கள் கண்டறிந்து எச்சரித்துள்ளனர்.

இந்த மழைத் தண்ணீரை யாரும் பருகக்கூடாது என்று அதிகாரிகள் உத்திரவிட்டுள்ளனர்.

பர்மாவில் புரட்சிக்காரர்கள்

பர்மா சர்க்காரால் புரட்சிக்காரர் என்று கூறப்படும், கம்யூனிஸ்டு கட்சியினரும், தனி நாடு கேட்கும் கரேனியர்களும், மீண்டும் தமது தாக்குதலைத் துவக்கியுள்ளனர்.

கடந்த வாரத்தில், ரங்கூன்—மண்டலே ரயில்வே பகுதியில் தாக்குதல் மிருந்திருந்ததாகத் தெரிகிறது.

ஜினீவா பேச்சுகள் முன்னேற்றம் இல்லை!

இந்தோ-சீனாவில் போர் நிறுத்தம் செய்வதற்காக ஒன்பது நாடுகள் ஜினீவாவில் நடத்திய இரகசிய மாநாட்டில் முன்னேற்றம் காணவில்லை என்று தெரிகிறது.

லாவோஸ், கம்போடியா பகுதிகள் பற்றி பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி அமைச்சர் ஜியார்ஜ் பிடால்டுக்கும், வியட்மின் உதவிப் பிரதமர் பாம் வான் டாங்கிற்கும் இரகசிய கூட்டத்தில் உலத்த விவாதம் இருந்ததாம்.

வெள்ளையர் நிறத் திமிருக்கு சாவுமணி

விடுதலைப் போரில் தி. மு. கழகத் தோழருக்கு தண்டனை

பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து புதுவை, காரைக்கால் பகுதிகளை விடுவிக்க நடைபெறும் விடுதலைப் போரில், காரைக்கால் தி. மு. கழகத் தோழர் சின்னப்பா ஈடுபட்டதற்காக காரைக்கால் (பிரெஞ்சு) கோர்ட்டால் 15 நாள் சிறை தண்டனை பெற்றார்,

மற்றும், ஜவஹர் வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த கோவிந்தராஜு, காங்கிரஸ்காரர் மீனாட்சிசுந்தரம் ஆகியோரும் தண்டனை பெற்றனர்.

வியட்நாம் படையினர்

அமெரிக்கர் பயிற்சி அளிப்பர்?

ஜினீவா, மே 18—

இழக்கு சிய மாநாட்டில் அமெரிக்க தூதுகோஷ்டியின் தலைவர் பெடல் ஸ்மித்தும், பிரெஞ்சு ஆதிக்கத்தில் உள்ள வியட்நாம் பகுதியின் தலைவர் பாவோடாயும் சந்தித்துப் பேசினர்.

பாவோடாய் அருப்புகளுக்கு அமெரிக்கர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பது பற்றிய அந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாம்.

பள்ளிகளில் நிற வேற்றுமை காட்டுவது சட்ட விரோதம்

சுப்ரீம் கோர்ட் தந்த நல்ல தீர்ப்பு

"இன்றையத் தினம், கல்வியானது, மாநில சர்க்காருடையவும் வட்டார நகராட்சி மன்றங்களினுடையவும், முக்கியப் பணியாக இருந்து வருகிறது; கட்டாயக் கல்வி போதனையை வலியுறுத்தும் சட்டங்களும், கல்வித் துறையில் செலவழிக்கப்படும் பெரும் தொகையும், நமது ஜனநாயக சமுதாயத்திற்குள்ள கல்வி முக்கியத்துவத்தை, நாம் ஒப்புக்கொண்டுள்ளதை விளம்பரப்படுத்துகிறது"

"கல்வி பெறும் வாய்ப்பு மறுக்கப்பட்டால் ஒரு குழந்தை தனது வாழ்க்கையில் வெற்றி பெறும் என எதிர்பார்ப்பது இக்காலத்தில் ஐயத்திற்குரியதாகும். கல்வி பெறுவதற்கான அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்தித்தர அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும்பொழுது அந்த உரிமையை, பொதுவான முறையில் அனைவரும் அனுபவிக்கச் செய்தாக வேண்டும்."

அமெரிக்க பள்ளிகளில் நீக்ரோ குழந்தைகளை வெள்ளை நிறக் குழந்தைகளுடன் சேர்ந்து படிப்பதற்குத் தடை விதிப்பது, அமெரிக்க அரசியல் விதிகளுக்கு முரண்பட்டது என்று வரலாற்றுச் சம்பந்தமான தீர்ப்பொன்றை அமெரிக்க சுப்ரீம் கோர்ட் தந்துள்ளது. அத்தீர்ப்பு, நீதிபதிகளின் ஒருமித்த முடிவாகும்.

அத்தீர்ப்பு நீக்ரோக்களுக்குக் கிடைத்துள்ள மகத்தான வெற்றி! அமெரிக்காவில் வெள்ளையர்களுக்கும் நீக்ரோக்களுக்கும் உள்ள உறவு முறையில் குறிப்பிடத்தகுந்தது!

1857-ல் நடைபெற்ற பிரசித்திபெற்ற டிரெட்ஸ்காட் வழக்கில், 'நீக்ரோக்கள் குடிகள் அல்ல,' எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதன் பிறகு மூன்றே முக்கால் உள்நாட்டுப் போரின் விளைவாகத்தான், அத்தீர்ப்பு மாற்றப்பட்டது.

வெள்ளையர்களையும் நீக்ரோக்களையும் பாகுபாடு செய்வதானது, நீக்ரோக்களுக்கு "சட்டத்தின் மூலம் நாட்டில் இருக்கும் சமத்துவமான பாதுகாப்பு மறுக்கப்படுவதாகும்" என்று பிரதம நீதிபதி ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

பிரதம நீதிபதி கூறிய மேற்படி கட்டளை, அரசியல் சட்டத்தின் 14-வது திருத்தத்தில் இருக்கிறது. இதை ஆதாரமாகக்கொண்டுதான் நீக்ரோக்கள் சம உரிமைக்குப் போரிடுகின்றனர்.

சுப்ரீம் கோர்ட் தந்த தீர்ப்பானது, தெற்குக் கரோலினா, வர்ஜீனியா, டெலவர், கான்சாஸ், முதலிய நான்கு மாகாணங்களிலிருந்து தொடரப்பட்ட வழக்குகளுக்குக் கிடைத்துள்ளதாகும்.

கொலம்பியா மாவட்டத்திலும், 17 மாகாணங்களிலும் 90 லட்சம் வெள்ளையர் 26,50,000 நீக்ரோ குழந்தைகளும், தனித்தனி பள்ளிகளில் படித்துவருகின்றன.

மேற்குறிப்பிட்ட அமெரிக்க தெற்குப் பகுதியில், அமெரிக்காவில் உள்ள நீக்ரோக்களில் 15,042,692 நபர்களில் 10,522,495 நீக்ரோக்கள், அதாவது 70 சத விகிதத்தினர் வசித்து வருகின்றனர் என்று தெரியவருகிறது.

பாக். கம்யூனிஸ்டுகளுக்கு மேலும் தொல்லை

9 பேர் கைது; பலர் தேடப்படுகின்றனர்

கராச்சி, மே. 18—

பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது ஒன்பது கம்யூனிஸ்டு கட்சியினர் மேற்குப் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லாகூர், பெஷாவர் ராவல்பிண்டி ஆகிய இடங்களிலும் கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

கிழக்கு பாகிஸ்தானில் கம்யூனிஸ்டு கட்சியினரைக் கைது செய்யும் வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஊர்வலங்கள் பொதுக் கூட்டங்கள் அனைத்தும் ஒரு மாத காலத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது

பாகிஸ்தானில் கம்யூனிஸ்டு கட்சியைத் தடை செய்யப் போவதாக செய்தி ஒன்று நேற்று வெளியாகியது.

டாக்கா கலகத்தில் 600 பேர் மாண்டனர்

கிழக்கு வங்க டாக்காவில் நடைபெற்ற பயங்கர கலகத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 600 இருக்கும் என்று கூறப்படுகிறது.

இதுவரை 300 பிணங்கள் கண்டெடுக்கப்பட்டன; மேலும் கண்டு எடுக்க முயற்சி நடக்கிறது.

ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டவர்களில் 12 பேர் மாண்டுபோயினர்.

மில் பகுதி பட்டாளத்தின் மேற்பார்வையில் இருக்கிறது.

அமைதி நிலவுகிறது.

சர் சி. பி.-க்கு புதிய பதவி!

சர். சி. பி. ராமசாமி அய்யர், விரைவில் காசி சர்வகலாசாலை வைஸ்-சான்சலர் ஆக நியமிக்கப்பட இருக்கிறாராம்.

ரங்கூனில் மே 22-ல் நடைபெறும் ஆசிய சோஷலிஸ்ட் மகாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து ஏழு பேர் செல்வார்கள்.

நம் நாடு

திராவிடக் கழக தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—5—54 புதன்

வெற்றி விழா!

ஒழிந்தது வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டம்! அழிந்தது ஆணவம்! வெற்றி விழா கொண்டாடுவீர், வீரர்காள்!

இந்தத் திங்கள் 23-ம் நாள், எங்கும் வெற்றி விழாக் கூட்டம் நடத்தி மகிழ்ச்சி பெறுங்கள்—மக்களுக்கும் மகிழ்ச்சியை வழங்குங்கள்!

கழகக் கட்டிடங்களிலும், கழகத் தோழர்களின் இல்லங்களிலும் கொடி ஏற்றியும், விளக்கொளியிட்டும், எழில் பெறச் செய்து, சிறுருக்கு இனிப்புப் பண்டம் வழங்கியும், அறப்போரில் ஈடுபட்டோர்க்கு வாழ்த்தும் வணக்கமும் கூறியும், விழாக் கொண்டாடுங்கள்!

போராட்ட வரலாறு பற்றி மக்களிடம் எடுத்துரைத்து, பெற்ற வெற்றிக்காக மக்களை மதிக்கும் ஆட்சியைத் துவக்கி இருக்கும் காமராஜருக்கு நன்றி கூறிக் கொள்ளும் நல்லுரை ஆற்றுங்கள்!

அறப்போர் வென்றது—அகமகிழ்கிறோம்! அறம் என்றும் வெல்லும்! அவ்வழி நடப்போம்; நல்வழி வகுப்போம்; திராவிடம் பெறுவோம்! வாழிய வீரர்காள்!!

மட்டற்ற மகிழ்ச்சி!

அமெரிக்க உயர் நீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்) நிறவெறியின் மண்டையில் அடிப்பது போன்றதோர் தீர்ப்பு அளித்திருக்கிறது.

பொதுப் பள்ளிக்கூடங்களில், நீக்ரோ சிறுவர்களைத் தனி இடத்தில் உட்கார வைக்கும் கொடுமையை, 'மடைமை' என்று தீர்ப்பு சுட்டிக் காட்டுகிறது.

அமெரிக்க வெள்ளையர் ஏதோ அபூர்வப் பிறவி போலவும், கருப்பான நீக்ரோக்கள் கேவலமானவர்கள் போலவும், இருவரும் சேர்ந்து இருப்பது இழுக்கு போலவும், இறுமாப்பாளர் கருதினர்; இந்தச் 'சேரி' முறையை, அறிவுக்கூடங்களிலேயே புகுத்தி அக்கிரமம் விளைவித்தனர்.

நீக்ரோ பிரச்சினை, அமெரிக்காவின் அடிப்படையையே ஆட்டி வைக்கும் அரசியல் பூகம்பத்தை உண்டாக்கி வைத்தது—ஒரு காலத்தில்!

காட்டு மிருகங்களை வேட்டையாடிப் பிடிப்பது போல, ஆப்பிரிக்கா கண்டத்து நீக்ரோ மக்களை, கொள்ளைத் தொழிலிலே ஈடுபட்டிருந்த வெள்ளையர், கூட்டம் கூட்டமாகப் பிடித்து, உலகின் பல நாடுகளில், குறிப்பாக அமெரிக்காவில், அடிமைகளாக விற்று வந்தனர்.

இந்த அடிமை வர்த்தகத்தையும், அதனால் ஏற்பட்ட பயங்கரமான விளைவுகளையும், அறிவாளர்கள் பலமாகக் கண்டித்து, ஆபிரகாம் லிங்கன் போன்றோர் வாதாடி, போராடி, அந்தக் கேடு தரும் முறையை ஒழித்தனர்; அடிமைகள் விடுதலை பெற்றனர்!

மனிதனை மனிதன் ஆடுமாடு வாங்குவதுபோல் விலை கொடுத்து வாங்கி பட்டியில் போட்டடைத்து வேலை வாங்கும் விபரீதம் ஒழிந்தது; ஆனால் நிறவெறி இன்னமும் மடிய மறுக்கிறது!

நீக்ரோ மக்கள் இன்று தமது அறிவாற்றலால், தாங்கள் எந்தத் துறையிலும் அமெரிக்க வெள்ளையருக்குக் குறைந்தவர்களல்ல என்பதை தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டிவிட்டனர்.

நீக்ரோ இனத்திலே, மனித குலத்துக்கே மாண்பளிக்கும் பெரியவர்கள் தோன்றிப் புகழ் பரப்பி, பாரின் பண்பையும் உயர்த்தியுள்ளனர்.

எனினும், அமெரிக்காவில், நிறவெறி சாக மறுக்கிறது; அவ்வப்போது இந்த வெறி தலைவிரித்தாடி, படுகொலையில் சென்று முடிகிறது!

பிரிட்டனின், அரசு, 'மத சுதந்திரம் தர மறுத்து அடக்குமுறை வீசுகிறது,' என்று மனம் குமுறி, "விடுதலை, உரிமை எனும் உயர் நெறி பெறுவதற்காகக் 'கண் காணாத் தேசம்' சென்றேனும் வாழலாம்," என்று சென்றவர்கள்தான் இன்றைய அமெரிக்கரின் மூதாதையர்; யாத்திரை செய்யும் பெரியவர்கள், என்றுகூட அவர்களுக்குச் சிறப்புப் பெயர் இருந்து வந்தது.

உரிமை தேடிச் சென்ற அந்த உத்தமர்களின் வழி வந்தோர், அடிப்படை மனித உரிமையையே மறுத்து, நீக்ரோக்களை மிருகமென்று எண்ணிக் கேவலப்படுத்தினர்.

தன் குட்டிகளுடன் கொஞ்சி விளையாடும் புலி, மான் கன்றுகளைக் கொன்று தின்பது போல, எந்த உரிமை உயிரினும் மேலானது என்று போற்றி வளர்த்திட 'புது உலகம்' சென்றனரோ, அதே உரிமையை நீக்ரோ மக்களுக்குத் தர இயலாது என்று பிடிவாதம் பேசி கொடுமை புரியத் துணிந்தனர்.

பள்ளிகளிலும், உணவு விடுதிகளிலும், கலை அரங்குகளிலும், விளையாட்டு இடங்களிலும், ரயில்வேக்களிலும் அலுவலகங்களிலும், 'நீக்ரோக்கள், வெள்ளையருடன் சமமாக இருத்தல் ஆகாது; தனி இடம் ஒதுக்கப்பட வேண்டும்,' என்று காட்டுமுறை வகுத்தனர்; மீறுவோரை இம்சித்தனர்.

அமெரிக்கரில் பண்புள்ளவர்கள் இதனைக் கண்டித்த காலை கேலி பேசினர்; 'வெள்ளையன் இரத்தம் பரிசுத்தமானது,' என்று ஆராய்ச்சியும் பேசினர்.

மெள்ள மெள்ள இந்த மடைமை சாகடிக்கப்பட்டுக் கொண்டு வந்தது; ஒவ்வொரு துறையிலும் நீக்ரோ மேதைகள் எழ எழ, நிற வெறிக் கொள்கையின் போலித்தனம் வெளிப்பட்டது!

எனினும், 'ராஜ்ய சர்க்கார் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில், நீக்ரோக்களுக்கு சமசந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்; அமெரிக்கருடன் ஒரேபடியான இடம் தரப்பட வேண்டியதில்லை,' என்று 56 ஆண்டுகளுக்கு முன்பு சுப்ரீம் கோர்ட்டே தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பைத் திருத்துக் கட்டி, நீக்ரோக்களுக்கு நியாயம் வழங்கும் வகையில், மே 17-ந் தேதி, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது.

தமது குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் ஒதுக்கப்பட்ட இடத்தில் உட்கார வைப்பதை எதிர்த்து சில நீக்ரோ பெற்றோர் தொடுத்த வழக்கிலே, தீர்ப்பளிக்கையிலேதான் சுப்ரீம் கோர்ட், மேலான கொள்கையைத் தந்திருக்கிறது.

"நீக்ரோக்களைப் பள்ளிக்கூடத்திலே ஒதுக்கிடத்தில் இருக்க வற்புறுத்துவது அமெரிக்க அரசியல் சட்டத்துக்கே விரோதமானது," என்று தீர்ப்பளித்திருக்கிறார், முதல் நீதிபதி ஏர்ல் வாரன்.

இந்தத் தீர்ப்பின் மூலம் ஏர்ல் வாரன், உலகிலே ஒரு உத்தமமான கோட்பாட்டினை வழி செய்திருக்கிறார்.

இந்தத் தீர்ப்புக்குப் பிறகாவது அமெரிக்க நிறவெறியர்கள் தமது போக்கை மாற்றிக் கொள்வார்களா என்பது இனித்தான் தெரியவேண்டும்.

இப்படிப்பட்ட நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டுதான் மலான், ஆப்பிரிக்காவிலே, வெள்ளையரல்லாதாரை 'சேரி'களில் ஒதுக்கும் செருக்குமிக்க திட்டத்தைப் புகுத்திக் கொடுமை செய்கிறார்.

நிறவெறி பல்வேறு நாடுகளிலேயும், பல்வேறு அளவிலும், வகையிலும் இருக்கிறது.

திராவிடத்தில் பேதமற்ற ஓர் சமுதாயம் காண விழையும் நமக்கு, அத்தகைய சமுதாயத்தை உருவாகவிடாமல் தடுக்கும் ஆரியர்களை அழித்தொழிக்கும் அறப்போரில் இடையறாது ஈடுபட்டுள்ள நமக்கு, நிறவெறிக்கு மண்டையில் அடி விழுவது மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது!

கூடிக் குடி கெடுப்போர், தேடிப் பகை வளர்ப்போர்!

[சி. என். அண்ணாதுரை]

(2)

காமராஜர் 'பதவி' கொடுத்தால் தமது வீரதீர பிரதாபத்தையும், தங்களுக்கு அளவு கடந்த செல்வாக்கு இருப்பதாகவும் காட்டிக் கொள்வதற்காக காரசாரமாகப் பேசியும், கண்டன அறிக்கைகள் விட்டும், தேடித் தேடி பகையைக் கிளப்புவோர் ஒரு ரகம் இருக்கிறது!

இவர்கள், 'இரண்டு ஜில்லா எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; இங்கு, காங்கிரசுக்கு எதிர்ப்பாக எவன் பேசினாலும் தலையைச் சீவி விடுவோம்; அடித்து நொறுக்கி விடுவோம்; அப்படிப்பட்ட செல்வாக்கு எமக்கு உண்டு,' என்று பேசிப் பேசி, வீணுக்குப் பகையை மூட்டிக் கொள்கிறார்கள்!

சம்பிரதாயத்துக்காகப் போடப்படும் மாலைகளை, இவர்கள் 'வாகை' என்று எண்ணிக் கொண்டு, திராவிட இயக்கத்தைத் தலையில் குட்டிப் பார்க்கிறார்கள்; இதனால் மூளக்கூடிய பகை காமராஜரின் மந்திரி சபைக்குத்தான் தலைவலியாகிவிடும்!

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதுபோலாகும் காமராஜரின் நிலைமை—இவர்களின் போக்கைக் கவனிக்கத் தவறிவிட்டால்!

"வெறும் மந்திரி வேலையை ஒழுங்காகப் பார்த்தால் போதும்; வீண் பகையை ஊர் ஊராகத் தேடி வைக்காதீர்களப்பா, புண்ணியவான்களே! புது நண்பர்களானீர்கள், மெத்த சந்தோஷம்; ஆனால் அதற்காக, சல்லடம் கட்டிக்கொண்டு கிளம்பி, பகையைச் சேகரித்துக்கொண்டு வரவேண்டாம்!" என்று கூறிட வேண்டும்!

கூடிக் குடி கெடுப்போர், தேடிப் பகை கொள்வோர்—ஆகிய இரு சாராரின் போக்கையும் கூர்ந்து கவனித்து—அவ்வப்போது தடுப்பு நடவடிக்கை எடுத்தாலொழிய, எந்தச் சமயத்திலும் இடர் வந்து மந்திரி சபையைத் தாக்கும்!

பொது மக்களிடம் தொடர்பும், கட்டுக் கோப்பான கட்சி அமைப்பும், பிரச்சார பலமும் கொண்ட திராவிட இயக்கம், ஆளும் குழுவில் இல்லை என்பதும், அவ்விதமான 'இலட்சணம்' இல்லாத சிலர் மந்திரிகளாக இருப்பதையும் காமராஜர் உணர வேண்டும்!

பொது மக்கள் தொடர்பு கொண்ட திராவிட இயக்கத்தின் காலை மிதிக்கும் காரியத்தில் எந்தக் 'கனமு'ம் ஈடுபட காமராஜர் இடமளித்தலாகாது—இடமளிப்பது, மந்திரி சபைக்குத்தான் எதிர்ப்பை மூட்டிவிடும்!

"......என்றாலும் டாவாயில்லை," என்று இழுத்தாற்போலப் பேசினாலும், தேசிய ஏடுகள் தம்மை வரவேற்றதைக் காமராஜர் மறந்து விடக்கூடாது!

"படிப்பு அதிகம் கிடையாது; பாராளுமன்றப் பயிற்சி கிடையாது; நிர்வாகம் செய்யும் ஆற்றல் இருப்பதாகக் காட்டியதும் கிடையாது; என்றாலும், ஏதோ வந்திருக்கிறார், பார்ப்போம்" என்று அரைகுறை மனதுடன்தான் காமராஜர் மந்திரிசபையைத் தேசிய ஏடுகள் வரவேற்றன; ஒரு துளி கோபம் வந்தாலும் தாவிக் குதிக்கவும், தாட்சண்யம் பார்க்காது தாக்கவும் அவை முன் வரும்!

ஓமந்தூர் ரெட்டியார் தன்மானத்தையும், வகுப்பு நீதியையும் வளர்த்தார் என்ற ஒரே காரணத்துக்காக, அவரை, வகுப்புவாத விஷத்தை தேசியப் போர்வைக்குள் மறைத்து வைத்திருக்கும் ஏடுகள் தாக்கின!

காமராசர்மீதும், அவ்விதத் தாக்குதல் நடத்த, அவை, 'ஜாடை' காட்டப்படுதும் கிளம்பும்!

கூடிக் குடி கெடுப்போரும், தேடிப் பகை வளர்ப்போரும் முன்னவர் அறிந்தும்,

(3-ம் பக்கம் பார்க்க)

ஏரி மீது கோபமாம்....

"ரயில் நிறுத்தப் போராட்டத்தின் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத் தோண்டர்களுக்கு, அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்தான பிறகும், அபராதத் தொகையை சர்க்கார் நிர்ப்பந்த முறைகளைக் கையாண்டு வசூலித்தார்களா? அப்படியானால் வசூலித்த தொகை எவ்வளவு?"

என்று, செஞ்சி தொகுதி எம். எல். ஏ.வும், உழைப்பாளர் கட்சியினரும், தி. மு. கழகத் தோழமை பெற்றவருமான தோழர் அரங்கநாதன் நிதி அமைச்சரைக் கேள்வி கேட்டிருந்தார்; கேள்வி அச்சாகியும் விட்டது.

ஆனால், 18-ந் தேதி, 'அந்தக் கேள்வியைத் தான் கேட்கப் போவதில்லை,' என்று கூறி, எம். எல். ஏ. அரங்கநாதன், வாபஸ் வாங்கிக் கொண்டார்.

தி. மு. கழகத்தின் மீது கோபம், அவருக்கு!! அவரால் இயன்றதை அவர் செய்கிறார்!

"ஏரி மீது கோபித்துக் கொண்டு........" என்னும் கதை போலிருக்கிறதல்லவா? இதே கேள்வி மீண்டும் வருகிறது, நன்றி மறக்காதவர்களால்!!

நகராட்சிகளுக்காக வி. வி. ராமசாமி வாதாடினார்

தனிப்பட்டோர் நடத்தும் மின்சார சப்ளை கம்பெனிகளை சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடத்தும் பிரச்சினைப் பற்றி மேல் சபையில் விவாதிக்கப்பட்டபோது, தோழர் வி. வி. ராமசாமி நகர சபைகளின் நிர்வாகத்திலிருக்கும் மின்சார நிலையங்களை, சர்க்கார் பறித்துக் கொள்ளக் கூடாது என்றும், ஏற்கனவே சர்க்கார் வசமாகி விட்டிருப்பதையும் நகராட்சியிடம் திருப்பித் தந்துவிட வேண்டும் என்றும் வாதாடினார்.

நகராட்சி மன்றத் தேர்தலின் போது, எல்லா முற்போக்குக் கட்சிகளும், நீதிபோல வாக்களித்து ஓட்டு வாங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்லக்குடி அறப்போர்

டில்லியில் 'கச்சராயர்' முயற்சி

காமராஜர் சர்க்கார் கருத்தறிந்து டில்லி முடிவு செய்யும்

கல்லக்குடி அறப்போர் சட்டபூர்வமான வெற்றியைத் தரும் கட்டம் விரைவில் ஏற்படும் என்பதற்கான அறிகுறி தெரிகிறது.

'டால்மியாபுரம்' என்ற அடிமைச்சின்னப் பெயரை மறைத்து, கல்லக்குடிப் போராட்ட தளபதி தோழர் கருணாநிதி ஒட்டிய 'கல்லக்குடி' நிலைத்து நிற்கிறது.

கல்லக்குடி அறப்போர் வீரர்கள் கடும் சிறைத் தண்டனைக்கு ஆளானார்கள்.

துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழந்தனர்; சிலர் இழந்தனர்.

இவ்வளவு இன்னலையும் துடைத்திடுவதுபோல, இன்றும் 'கல்லக்குடி' என்ற பெயரே காட்சி அளிக்கிறது.

இனி, சர்க்கார், மக்களின் கிளர்ச்சிக்கு மதிப்பு அளித்து சட்டப்படி பெயரை மாற்றி, 'கல்லக்குடி'யைக் காட்டி, மக்களை மகிழ்விக்கச் செய்ய வேண்டும்.

இதற்கான முயற்சியை, டில்லி சென்றுள்ள திராவிட இயக்க ஆதரவாளர், செய்தவண்ணம் இருக்கிறார்கள்.

உழைப்பாளர் கட்சித் தோழர் கோவிந்தசாமி கச்சராயர் (மந்திரி சபையில் இடம் பிடித்துக்கொள்ளவில்லை!) இந்தப் பிரச்சினை பற்றி அமைச்சருக்கு அறிக்கையில், "சென்னை ராஜ்ய மக்கள், டால்மியாபுரம் என்ற பெயரை நீக்கிவிட்டு, ரெவின்யூ கிராமத்துக்கு உள்ள பெயரான கல்லக்குடி என்று பெயரிட வேண்டுமென்று விரும்புகிறார்கள். டால்மியாபுரம் என்பது சமீப காலத்துக்கு முன்பு முளைத்ததுதான். இது சம்பந்தமான கனம் அமைச்சருக்குப் பலர் விண்ணப்பித்துக் கொண்டுள்ளனர். இது குறித்துப் பொதுமக்கள் கிளர்ச்சியும் நடைபெற்றது. இதை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டும்," என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு, 14—5—54-ல், அமைச்சர் அனுப்பிய பதிலில் "தென் ரயில்வே நிர்வாகம், சென்னை ராஜ்யத்துடன் இது சம்பந்தமாகத் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது என்றும், சென்னை ராஜ்ய சர்க்காரும் ரயில்வே நிர்வாகமும் அளிக்கும் யோசனையின்படி நடவடிக்கை எடுக்கப்படும்," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அன்பர் கச்சராயர் இச் சம்பந்தமான தகவலை நமக்கு அனுப்பியிருக்கிறார்.

இனி 'கல்லக்குடி' என்று பெயர் இருப்பதே பொருத்தம் என்று சென்னை சர்க்கார் கருத்து அளித்தால், திராவிடரின் மனம் மகிழும்; காமராஜர் இதைக் கவனித்து ஆவன செய்வார் என்று நம்புகிறோம்.

கல்வித் திட்டம் ஒழிந்தது!

கம்யூனிஸ்டுகள் வரவேற்பு

அகில இந்திய கம்யூனிஸ்டு கட்சி தமிழ்நாடு கமிட்டிச் செயலாளர் தோழர் எம். ஆர். வெங்கட்ராமன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"புதிய கல்வித் திட்டத்தைக் கைவிட்டு விடுவதென்று அறிவிக்கப்படுகிற சென்னை காங்கிரஸ் அரசாங்கத்தின் முடிவு வரவேற்கத் தக்கதாகும். இந்த முடிவு வேண்டாத ஒரு கல்வித் திட்டத்தை எதிர்த்து, சட்ட சபையிலும், சட்ட சபைக்கு வெளியில் உள்ள எல்லா பகுதி மக்களாலும் இடைவிடாது தொடர்ந்து நடத்தப்பட்ட கிளர்ச்சிகளுக்கு ஒரு வெகுமதியாகும். மக்கள் பெற்றுள்ள இந்த முன்னேற்றம், மக்களின் நலன்களைப் பாதிக்கிற எதையும், மக்கள் சகித்துக் கொள்ளும் நிலையில் இல்லை. மக்களின் நலன்களைப் பாதிக்கிற எதையும், திட சித்தத்தோடு எதிர்த்துத் தோற்கடிப்பார்கள் மக்கள் என்பதைத்தான் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது."

சென்னைக்கு டெல்லி உதவி!

ராஜ்யங்களில் அதிகமான குழந்தை மரணங்களைத் தடுப்பதற்காக, பிரசவ மருத்துவ நிலையங்களை நிறுவுவதில் ராஜ்ய அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் உதவி செய்ய முடிவு செய்துள்ளதாம்.

அதன்படி சென்னை ராஜ்யத்தில் 25 நிலையங்களை நிறுவுவதற்கு மத்திய அரசாங்கம் உதவும். அந்த 25 நிலையங்களிலும் ஆரம்பத்தில் ஒவ்வொரு நிலையத்திற்கும் ரூ 2000 பெறுமான சாமான்கள் வழங்கப்படும்.

இந்த விவரத்தை சென்னை சட்ட சபையில் சுகாதார மந்திரி டாக்டர் ஏ. பி. ஷெட்டி அறிவித்தார்.

ஜெர்மன் இராணுவம்

"அதிகரிக்கக் கூடாது" என எச்சரிக்கை

"பிரிட்டனில் உள்ள 75 சதவிகித மக்கள் ஜெர்மனியை இராணுவ வலிமையுள்ளதாக்கும் கொள்கையை எதிர்க்கின்றனர். என்றாலும், இன்றைய ஆளும் கட்சியும் ஜெர்மனியை இராணுவ மயமாக்கவேண்டுமென்ற திட்டத்தை ஆதரிக்கின்றனர்."

இவ்வாறு, பிரிட்டனின் முன்னாள் தொழில் மந்திரி ஜான் ஸ்ட்ராச்சி தெரிவித்தார். சோவியத் நாட்டின் வளர்ச்சியைக் கண்டு பயந்தே இம்மாதிரியான யோசனைகளை ஆதரிக்கின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

"மேற்கத்திய நாடுகளின் பாதுகாப்புக்கு நாம் உதவவேண்டியது அவசியம் என்றாலும், ஜெர்மனியில் ஆயுதப் பலத்தை அதிகரித்துவிட்டால், பின்னர் ஜெர்மனியின் இராணுவத்தைக் கண்டு நாமே அச்சப்படும் நிலைமை ஏற்படலாம்" என்று அவர் மேலும் கூறினார்.

கழகக் கூட்டங்கள்

★

பூதலப்பட்டு:

20—5—54 வியாழன் மாலை

தலைவர்: அன்புமணாளன்

பேசுவோர்:

மணிஎழிலன்

பொன்னரசி

★

சென்னை:

(5-வது வட்டம்)

கிருட்டினசாமி பிள்ளை தோட்டம்

(கொருக்குப் பேட்டை புகைவண்டி நிலைய அருகாமை)

20—5—'54 வியாழக்கிழமை

தலைவர்: அ. பொன்னம்பலனார்

பேசுவோர்:

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

இரா. நெடுஞ்செழியன்

இசை: நாகூர்—அனீபா

★

ஏகாம்பரக்குப்பம்:

27—5—'54 வியாழக்கிழமை

மாலை 5 மணிக்கு

தலைவர்: கே. வெங்கடேசம், (பஞ்சாயத்து போர்டு தலைவர்)

பேச்சாளர்கள்:

இரா. நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்

ஏ. எல். சி. கிருட்டிணசாமி

இடம்: பாண்டியன் அரங்கில்

முன்னாள் வீரர் மறைவு

ஜெர்மன் இராணுவத்தின் முன்னாள் தளபதியும், நாஜி ஜெர்மனியின் இராணுவ நிபுணர்களில் ஒருவருமான ஹெயின்ஸ் கார்டியன் தனது 65 வயதில் மரணமடைந்தார். 1945-ல் ஜெர்மன் இராணுவ அதிகாரிகளுக்கு அவர் தலைமை தாங்கினார்.

மாயூரம் தி.மு.க. தோழர்கள்

காமராஜரைக் கண்டு கனிவுரை

தூத்துக்குடி வழக்கு பற்றி கோரிக்கை

மாயவரம் தி. மு. கழகத் தோழர்கள் 16—5—54 பொதுக்கூட்டத்துக்காக வந்திருந்த காமராஜரைச் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள்.

தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று கோரி, ஆயிரக்கணக்கானவர் கையொப்பமிடப்பட்ட 'மகஜர்' காமராஜரிடம் தரப்பட்டது.

வழக்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டத்தில் இருக்கிறது என்றும், இது குறித்து தக்க சமயத்தில் தாம் கவனிப்பதாகவும், முதலமைச்சர் கூறினார்.

தோழர்கள் என். கிட்டப்பா, ஆர். பழனிச்சாமி, வி. சங்கையப்பன், ராமானுசம், எம். சி. அ. காசிநாதன், க. அருணாசலம் ஆகியோர் நகர தி. மு. க.வின் சார்பில் காமராஜரைக் கண்டு பேசினர்.

ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை எடுத்து விடுவதற்காக காமராஜருக்கு, தோழர்கள் நன்றி தெரிவித்தனர்.

மேற்கு வங்க அரசு ஆசிரியர்களுக்கு பணிந்தது

சம்பள உயர்வு தர சர்க்கார் சம்மதம்

கல்கத்தா, மே 14—

மேற்கு வங்காளத்தில் சில மாதங்கட்கு முன் ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரி போராட்டங்கள் பல நடத்தி தியாகங்கள் பல புரிந்தனர் அல்லவா? அதன் பலன் அவர்களுக்கு கைமேல் கிடைத்துவிட்டது.

செகண்டரி பள்ளிகள், ஆரம்ப பள்ளிகள் ஆகியவற்றில் பணி புரியும் ஆசிரியர்களின் சம்பளம், பஞ்சப்படி முதலியவற்றை உயர்த்த சர்க்கார் ஒப்புக் கொண்டுவிட்டது. அத்துடன் அந்த ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவச கல்வி வசதியும், வைத்திய வசதிகளும் செய்து தரவும் சர்க்கார் சம்மதித்துள்ளது.

நியமிக்கப்பட்டுள்ள கல்வி விசாரணைக் குழு தரும் அறிக்கையின்படி சம்பள விகிதங்களை சர்க்கார் அதுபோது திருத்தி அமைக்கும் என்றும் தெரிகிறது.

காடுகளில் உள்ள கழனிகள்

ஏழைகளுக்கு அளிக்கப்படும்

வால்டேர், மே. 17—

ஆந்திர ராஜ்யத்தில் உள்ள ரிசர்வ் காடுகளில் பயிரிடத் தகுந்த நிலங்கள் ஏராளமாக உள்ளன. அப்பகுதியிலே நிலமில்லாத ஏழைகளுக்குப் பிரித்துக்கொடுக்க சர்க்கார் முடிவு செய்துள்ளனர் என்று ஆந்திர சட்டசபையில் வருவாய் இலாகா அமைச்சர் தோழர் பி. திம்மா ரெட்டி அறிவித்தார்.

சமாதானத் தேவைகள்

அணு சக்தியைப் பயன்படுத்த 10 கோடி டாலர்

அணு சக்தியை சமாதானத் தேவைகளுக்குப் பயன் படுத்த அமெரிக்காவின் தொழில் தலைவர்கள் 10 கோடி டாலர் செலவு செய்ய முன் வந்துள்ளனர்; இந்தத் தொகை 10 ஆண்டுகளில் செலவிடப்படும்.

கூடிக் குடி கெடுப்போர், தேடிப் பகை வளர்ப்போர்

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பின்னவர் அறியாமலும், இந்த ஏடுகளுக்கு இடமும், வாய்ப்பும் அளித்துவிடுவார்கள் என்றே அஞ்சவேண்டி இருக்கிறது!

காலக் குறியை அவ்வப்போது கவனித்தறிந்து காரிய மாற்றினால் மட்டுமே காமராஜரின் புகழுக்கு இழுக்கு வாராமல் பாதுகாத்துக்கொள்ள முடியும்!

'ஜில்லா போர்டு தேர்தல் முடியும் வரையில் தான் காமராஜர் முதலமைச்சராக இருப்பார்; அதற்குப் பிறகு, அவர் விலகிவிடும் வழியையும், நிலையையும் உண்டாக்கி விடுவோம்,"

என்று பேசும் காங்கிரஸ்காரர்கள் எம். எல். ஏ.-க்களாக உள்ளனர் என்பதைக் காமராஜர் அறிந்திருக்கிறாரோ, என்னவோ!

"பார்ப்பனரை மந்திரி சபையிலே சேர்க்கவே இல்லை பார்த்தீர்களா! அவ்வளவு பார்ப்பனத் துவேஷமிருக்கிறது காமராஜருக்கு," என்ற பேச்சும் கிளம்பிவிட்டிருக்கிறது.

"உழைப்பாளர் கட்சி, பொதுநலக் கட்சி இரண்டும், கனம்கள் ராமசாமி, மாணிக்கவேலர் ஆகியோர் மூலம் காங்கிரஸ் முகாமுக்குள் வந்துவிட்டது; ஆகவே இனி, வன்னிய சமூகமே நமக்குப் பாதுகாப்புப் படையாகி விடுகிறது; ஆகையால், திராவிட இயக்கத்தைத் தாக்கி தகர்க்கலாம்," என்ற கலகமூட்டுபவர்கள் உள்ளனர்; அவர்கள், புன்னகையால் புது மந்திரி சபைக்குப் புதைகுழி தோண்டுவோர் ஆவர்!

காமராஜர் மந்திரி சபைக்கு எதிர்ப்பு எப்படி எப்படிக் கிளம்பும் என்பதை எடுத்துக் காட்டுவதுபோல, திருவல்லிக்கேணிச் சம்பவம் நடைபெற்றது.

திட்டமிட்டுச் செய்யப்பட்டது இந்த திருவல்லிக்கேணி சம்பவம்; திடீரென்று முளைத்ததல்ல; எதிர்பாராமல் வெடித்ததுமல்ல!

தகுந்த இடம் என்ற எண்ணத்திலே, அங்கு செய்யப்பட்டிருக்கிறது!

கலகத்தின்போது கிளம்பிய முழக்கங்கள், எந்தக் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டது அல்ல என்பது கவனிக்கப்பட வேண்டும்; 'காமராஜர் ஒழிக' என்பதே முழக்கம்! இம் முழக்கமிட்டுக் கொண்டு பார்த்தசாரதி கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் ஊர்வலம் நடத்தி இருக்கின்றனர்.

போலீசாரின் துணை கிடைத்திருக்கிறது—கலகம் செய்பவர்களைக் கண்டுபிடித்து அடக்கி, கூட்டத்தை ஒழுங்காக நடத்திக் கொடுக்க அல்ல—கூட்டத்தை கிழித்த, பேச்சாளர்கள் தாக்குதலுக்கு ஆளாக மலிருக்க, கண்டன ஊர்வலக்காரர் தொல்லையின்றி ஊர்வலம் நடத்த!!

இத்தனைக்கும் காமராஜர், போலீஸ் மந்திரி!!

"ராஜாஜியை வீட்டுக்கு அனுப்பிவிட்ட பாபாவிகளே! அதைக் கொண்டாடக் கூட்டம் கூடவா போகிறீர்கள்! அதுவும் எங்கள் கோட்டையிலே!—என்ன துணிவு; எவ்வளவு மண்டைக் கர்வம்; பார்த்தசாரதி கோயில் எதிரே கூட்டம் போட்டு எங்கள் ராஜாஜியைக் கண்டிக்க!"—என்று கூறுவது போல, சம்பவம் இருந்திருக்கிறது.

இந்தத் திட்டமிட்டு நடத்தப்படும் காரியம், எங்கெங்கு வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கெல்லாம் நடத்தப்படும் என்று தெரிகிறது.

(பின்னும் வரும்)

உலக அரங்கில்......

ஜோர்டான் :

இஸ்ரேல் நாட்டு சிப்பாய்கள் தங்கள் எல்லையில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று ஜோர்டான் சர்க்கார் இஸ்ரேல்—ஜோர்டான் சமாதானக் கமிஷனிடம் புகார் செய்துள்ளனர்.

★

ஆஸ்திரேலியா :

ஆஸ்திரேலியாவில் உள்ள வெளிநாட்டு ஒற்றர்கள் பற்றிய விசாரணைக் குழுவான ராயல் கமிஷன், சோவியத் நாட்டினர் ஆஸ்திரேலிய நாட்டின் சர்க்கார் அதிகாரிகளை சோவியத் ஒற்றர்களாக மாற்ற முயன்றனர் என்று தெரிவித்தது.

★

ஜினீவா :

இந்திய சர்க்கார் சுகாதார இலாகா அமைச்சர் திருமதி அமிருதகௌர் உலக சுகாதார அசெம்பிளியில் கலந்துகொள்ள ஜினீவா வந்து சேர்ந்தார்.

* * *

பிரெஞ்சு யூனியனுக்குள் வியட்நாமுக்குப் பூரண சுதந்திரம் கிடைத்தாலொழிய தென் கி. ஆசியப் பாதுகாப்புத் திட்டத்தில் வியட்நாம் சேரும் என்று அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் பெடல்ஸ்மித்திடம் வியட்நாம் மன்னர் பாவோ—டாய் தெரிவித்தாராம்.

* * *

இந்தோ சீனாவில் அமைதி நிலவி சமாதானம் ஏற்பட வேண்டுமென்று கோரி ஜினீவாவில் உண்ணாவிரதம் இருக்கும் 34 வயதுடைய வோசங் நியட் என்பவரின் உடல்நிலை மிகவும் அபாயகரமாயுள்ளதாம். அவரது உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று ஸ்விஸ் போலீசார் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

★

வாஷிங்டன் :

பொதுப் பள்ளிக்கூடங்களில் நீக்ரோ மாணவர்களையும், மற்ற ஐரோப்பிய மாணவர்களையும் தனித்தனியே பிரித்துவைக்கக் கூடாது என்று அமெரிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இன வேற்றுமை காரணமாக பள்ளிகளில் மாணவர்களைப் பிரிக்கக்கூடாது என்பது அரசியல் சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது என்பதே இதன் பொருள்.

• • •

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் டல்லஸ் ஜினிவாமா நாட்டிற்கு திரும்பப் போவது இல்லை என்று சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறினார்.

★

இஸ்தான்புல் :

பல்கேரிய—துருக்கிய எல்லையில் நடைபெற்ற சிறு கலகம் ஒன்றில் இருநாட்டு காவலாளர்கள் சண்டையில் மூன்று பல்கேரிய சிப்பாய்களும், ஒரு பல்கேரிய சாதாரணக் குடிமகனும் இறந்துபோயினர். பல்கேரியாவைச் சேர்ந்த ஒருவர், அரசியல் தஞ்சம் புக துருக்கிய எல்லைக்குள் நுழைந்தபோது இச்சம்பவம் நிகழ்ந்தது.

★

தெஹ்ரான் :

ஈரான் சர்க்காரின் வேண்டுகோளுக்கு இணங்க சோவியத் சர்க்கார் ஈரானிலுள்ள தனது தூதுவர் காரியாலய இலாகா வை செயலாளரை திரும்ப அழைத்துக்கொள்ள சம்மதித்துள்ளது.

• • •

தெஹ்ரானில் தன் வியாபாரத்தை அதிகரிக்க ஜப்பானிய அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினர்.

வியன்னா :

அமெரிக்க ஆதிக்கத்திலிருக்கும் உள்ள ஜெர்மன் பகுதி இராணுவத்தைச் சேர்ந்த பீட்டர் ராங்க என்பவர், செக்கோஸ்லோவேகியாவில் தஞ்சம் புகுந்தார்.

• • •

ஆஸ்டிரியாவில் ரஷ்ய எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தடுக்க ஆஸ்டிரிய சர்க்கார் நடவடிக்கை எடுக்காவிடில், அந்நாட்டின்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆஸ்டிரியாவிலுள்ள ரஷ்யத் தூதுவர் எச்சரித்தார்.

★

பார்மோசா :

'பிரசிடெண்ட் கேட்வால்ட்' என்ற போலீஷ் கப்பல் பார்மோசா அருகில் வந்தபொழுது, தேசிய சீன சர்க்காரைச் சேர்ந்த அதிகாரிகள் அக்கப்பலின் 12-சீன அதிகாரிகளை நிறுத்தி வைத்துள்ளனர். தேசியச் சீன பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை விசாரிப்பார்களாம்.

* * *

தேசிய சீன விமானப் படையைச் சேர்ந்த 10 விமானங்கள் சீனக் குடியரசைச் சேர்ந்த கப்பல்கள் இரண்டைத் தாக்கி மூழ்கடித்ததாக தேசிய சீன சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

★

ரியோடி ஜினிரோ :

பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டதை எதிர்த்து ஆத்திரம் கொண்ட மக்கள் பதினைந்து பஸ்களை எரித்தனர்; இச்சம்பவத்தை ஒட்டி 40 பேர் காயமுற்றனர்.

★

வார்சா :

தேசிய சீனர்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள தங்கள் நாட்டைச் சேர்ந்த இரண்டு கப்பல்களை விடுவிக்க வேண்டுமென்று போலந்து சர்க்கார் ஐ. நா. சபையைக் கேட்டிருக்கிறது.

★

துருக்கி :

அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற ஜனநாயகக் கட்சியினர் அட்னான் மெண்டிரஸ் என்பவரின் தலைமையில் புதிய மந்திரி சபை அமைத்துள்ளனர்.

★

பாரிஸ் :

பிரெஞ்சு விமானங்கள் வியட்நாமின் தியன் பின் பூ-வுக்கும் சிவப்பு நதிப் பிரதேசத்துக்கும் இடையே உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சாலை ஒன்றை தாக்கி நாசப்படுத்தின.

★

கெய்ரோ :

வெளிநாடுகளுக்குச் செல்லும் எகிப்திய அதிகாரிகள் மூலம் இரகசியமாக எகிப்துக்கு தேவையான ஆயுதங்களை வாங்குவதாக எகிப்திய சேனாபதி அப்துல் ஹகீம் அமீர் தெரிவித்தார்.

★

லாகூர் :

முன்னர் நடைபெற்ற அமைதியின்மையின் போது சுடப்பட்டு விசாரணை செய்யப்பட இருக்கும் முன்னாள் பாகிஸ்தான் பஞ்சாப் முதலமைச்சர் மியான் மும்தாஜ் தௌலத்தானா மீது 91 குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டுள்ளதாம்.

★

தாருஸ்ஸலாம் :

இனிபாவை அடுத்துள்ள தங்கனிகாவின் வடபகுதியில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. தங்கனிகா பிரிட்டனின் காலனியாகும்.

கழகக் கூட்டங்கள்

★

ஆவடி

20—5—54 மாலை 5 மணிக்கு

இடம் : ஏரி மைதானம்

தலைவர் :

டி. சண்முகம், எம். எல். ஏ.

பேசுவோர் :

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ,

என். வி. நடராசன்

வி. எஸ். கோவிந்தராசன்

★

பூலாம்பாடி

தி. மு. கழக திறப்பு விழா

21—5—54 மாலை 6 மணிக்கு

இடம்: அல்லாகோவில் முன்பாக

தலைவர் : கு. கிருஷ்ணமூர்த்தி

பேசுவோர் :

என். வி. நடராசன்

தி. கோ. சிங்காரம்

ம. பொன்னம்பலம்

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

★

20—5—54: சென்னை- கொருக்குப்பேட்டை

23—5—54: சிவகாசி

24—5—54: கீரம்பூர் (திருச்சி)

25—5—54: விருத்தாசலம்

27—5—54: ஏகாம்பரகுப்பம்

போர் வெறி!

லாகூர், மே, 17—

போரிட்டுத்தான் காஷ்மீரைப்பெறவேண்டும் என்று பாகிஸ்தானுடன் கூடிக் குலவும் ஆசாத் காஷ்மீர் சர்க்கார் தலைவர் ஷேர் அகமத் லாகூரில் பேசி இருக்கிறார்.

சிங்மன் ரீயை சரிப்படுத்த மீண்டும் முயற்சி

கொரியாவில் சமாதானம் ஏற்படுத்த பொதுத் தேர்தல் நடத்துவதற்காக ஜெனிவாவில் 19 நாட்டுப் பிரதிநிதிகள் கூடிப் பேசும் மாநாடு முடிவு காணுகின்றது.

தென் கொரிய ஜனாதிபதி சிங்மன் ரீயின் பிடிவாதம் நெருக்கடியை உண்டாக்கிவிட்டிருக்கிறது.

'போர்தான் தகுந்த வழி; பேச்சு அல்ல,' என்று கொக்கரிக்கிறார் ரீ!

சிங்மன் ரீயைச் சரிப்படுத்த மீண்டும் ஒரு முயற்சி எடுப்பது என்று மாநாடு முடிவு செய்திருக்கிறது.

"என் சுயமரியாதைக்கு விரோதமாகும்"

இலங்கை ஆளும் கட்சி உப-தலைவர் விலகுகிறார்!

முன்னர் புது டில்லியில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருந்தவரும், இப்போது இலங்கை அரசாங்கத்தில் பதவியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உப-தலைவருமான தோழர் திக்ரி பண்டாரநாயக்கா, கட்சியில் தான் வகித்து வந்த பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

கட்சியின் பொதுக் காரியதரிசிக்கு அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் அவர் கூறுவதாவது :—

"நான், எனது உப-தலைவர் பதவியையும், கட்சியின் சாதாரண உறுப்பினர் பதவியையும் ராஜினாமாச் செய்கிறேன். என் சுயமரியாதை என்னை கட்சியில் பணியாற்ற அனுமதிக்கவில்லை"

அவரது ராஜினாமா ஒப்புக் கொள்ளப்பட்டதாம்.

மரமேறிகள் சத்தியாக்கிரகம்

100 பேர் கைது!

வால்டேர், மே. 18—

கிருஷ்ணா ஜில்லாவில் அரசாங்கத்தின் மது விலக்குக் கொள்கையை எதிர்த்து பல இடங்களில் மீண்டும், முன்னாள் மரமேறிகள் பனை மரத்தில் கள் இறக்க சத்தியாக்கிரகம் செய்தனர்.

குடிவாடா, கைக்கலூர், தாவுடிப்பாளையம், நகரம் ஆகிய இடங்களில் இதுவரை 100 பேர் மதுவிலக்குச் சட்டத்தை மீறியதாகக் கைது செய்யப்பட்டனர்.

★

டாலர்! டாலர்!

10,45,00 000 டாலர்கள் இந்தியாவுக்கு அமெரிக்க உதவித் தொகை தருவது என்று ஐசன்ஹவர் திட்டமிடுவதை அமெரிக்கத் தூதர் ஆலன் ஆதரித்து நியூயார்க் ரேடியோவில் பேசி இருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ராணுவ உதவி தருவது தருவது பற்றி இந்தியா எரிச்சலடைந்திருக்கிறது. எனவே, இந்திய—அமெரிக்க உறவை பலப்படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டி ஆலன், அமெரிக்கா இந்தியாவுக்குப் பண உதவி தரவேண்டும் என்பதற்குக் காரணம் காட்டினார்.

ஆந்திராவில் மரமேறிகள் கைது

சட்டசபையில் அவசரப் பிரேரபணைக்கு அனுமதி மறுப்பு

வால்டேர், மே. 18—

ஆந்திர ராஜ்யத்தில் இதுவரை முன்னாள் மரமேறிகள் 100-பேருக்குமேல் கைது செய்யப்பட்டதையொட்டி விவாதிக்க வேண்டுமென்று கிருஷிகர் லோக் கட்சியைச் சேர்ந்த தோழர் ஜி லட்சண்ணா அவர்கள் ஆந்திர சட்டசபையில் கொண்டுவந்த அவசரத் தீர்மானம் ஒன்றை சபாநாயகர் அனுமதிக்க மறுத்துவிட்டார்.

சத்தியாக்கிரகிகள் அனைவரும் இரண்டாண்டு காலமாக வேலையின்றியுள்ளனர் என்றும், சர்க்காருக்கு அவர்கள் முன்னதாகவே நோட்டீஸ் கொடுத்திருந்தும் சர்க்கார் மரமேறிகளின் கோரிக்கையை கவனிக்க மறுத்துவிட்டதென்றும், இப்படியே சென்றால் நிலைமை மோசமாகிவிடுமென்றும், ஆகவே, சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையேல் சத்தியாக்கிரகம் எல்லா மாவட்டங்களிலும் பரவுமென்றும் தோழர் லட்சண்ணா எச்சரித்தார்.

சபாநாயகர் :— நாம் முன்னரே 27-ந் தேதியன்று இதைப்பற்றிப் பேச முடிவு செய்துள்ளோம்.

லட்சண்ணா :— அது வேறு விஷயம்; இப்போது ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சபாநாயகர் :— சட்டத்தையும், ஒழுங்கையும் மீறியதால் தானே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்?

லட்சண்ணா :— இல்லை; அவர்கள் தங்களுக்கு வேலை தேவை என்று கேட்டனர்

தன் தொகுதியில் நடைபெறும் இச்சம்பவத்தை தான் விவரித்துச் சொல்வதாக தோழர் கே. ராஜகோபால் ராவ் தெரிவித்தார்.

உதவிப் பிரதமர் சஞ்சீவி ரெட்டி இதை ஆட்சேபித்தார்

சபாநாயகர் அவசரத் தீர்மானத்துக்கு அனுமதி மறுத்தார்

ஆச்சாரியாரை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்க!

என்ன கோபமோ தெரியவில்லை—இந்தத் தள்ளாத வயதில், கோயிலில் இருக்கும் நிலையில், ஆச்சாரியாரை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும்படி மைசூர் முதலமைச்சர் அனுமந்தய்யா கூறுகிறார்.

மைசூர் வக்கீல் சங்கத்தில் ஆச்சாரியார் படத்தை மே 17-ல் திறந்து வைத்துப் பேசுகையில், அனுமந்தய்யா, 'ஆச்சாரியாரை சர்வ தேச மாநாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்,' என்று கூறினார்.

கல்வி திட்டம் ஒழிந்தது

'அறிவகத்'தில் மகிழ்ச்சி

சென்னை, மே 19—

ஆச்சாரியாரின் குலமுறைக் கல்வித் திட்டம் ஒழிந்தது பற்றி சென்னை மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான 'அறிவகம்' நேற்று, தி. மு. கழகக் கொடிகளாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு அழகுற மிளிர்ந்தது. மாலையில், 'நம் நாடு' அலுவலகத் தோழர்களுக்கும், இளம் சிறுவர்களுக்கும் சர்க்கரை வழங்கப்பட்டது.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், அ. பொன்னம்பலனார், கே.எம். கண்ணபிரான், மற்றும் பல இயக்கத் தோழர்கள் இந்த வெற்றி விழாவில் கலந்து கொண்டனர்

இந்த வெற்றியினை ஒட்டி 'அறிவகம்' 18, 19-5-54 ஆகிய இரு நாட்களிலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

விலை குறைகிறது

யானைகளின் விலை மிகவும் குறைந்து போய்விட்டதால் யானை வியாபாரிகள் மிகுந்த கவலையுடன் காணப்படுகின்றனர்.

முன்பு ரூ. 3,000-க்கு விற்பனை செய்யப்பட்ட யானைகள், இப்போது 1000 அல்லது 1200 ரூபாய்க்கே விலைபோகின்றனவாம்!

விலை இறக்கத்தால் இவ்வாண்டு வழக்கம் போல் 300 யானைகளை பிடிக்காமல், 200 யானைகளே விற்பனைக்குக் காடுகளிலிருந்து பிடிக்கப்பட்டன என்று தெரிகிறது. பாகிஸ்தான் பிரிவினையே இந்த விலை இறக்கத்துக்கான காரணங்களில் ஒன்று என்று தெரிகிறது.

புதுடில்லி, மே 17—

யூனியன் சர்க்கார் நிதிமந்திரி ஆயர் ராஜ்யங்களில் 5 வாரங்கள் சுற்றுப் பயணம் செய்வதற்காக, மே 24-ந் தேதியன்று டில்லியிலிருந்து புறப்படுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அக்கால தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குப்பநாயகம் செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.